அசல்

20.5.42. புரொப்ரைட்டரி

அசல் -1

ஸ்ரீ எஸ். கல்யாணசுந்தரம்
அய்யர் அவர்கள்,
திருக்கழிக்குன்றம்.

37, தியாகராயரோடு,
தியாகராயநகர்,
20-5-42.

(17)

அநேக நமஸ்காரம்,

தங்கள் 19-5-42ல் கார்டு கிடைத்து விபரம் அறிந்தோம். நேற்று சீவக சிந்தாமணியின் சில பாரங்களின் புரூபை தங்களுடைய திருவட்டீஸ்வரன் பேட்டை விலாசத்திற்கு அனுப்பியிருக்கிறோம். இனி மற்ற பாரங்களின் புரூபுகளையும் அவ்விடமே அனுப்புவதா? அல்லது திருக்கழிக்குன்றம் விலாசத்திற்கு அனுப்புவதா? தங்களுக்குப் புரூப் கிடைத்ததும் அதை உடனே திருத்தி தாமதம் அன்னியில் ஸ்டரைக் ஆர்டர் கொடுக்கவேண்டியது. ஆபீஸ் மவுண்ட் ரோடிலிருந்து இவ்விடம் மாறியதால் இது காலம் சற்று தாமதம் ஏற்பட்டது. இனி உடனுக்குடன் தங்களுடைய வேலையை முடித்துத்தர சித்தமாய் இருக்கிறோம். ஒரு நாளைக்கு ஒரு பாரமோ அல்லது அதற்குமேலோ தரத்தயாராய் இருக்கிறோம். நான் அடுத்த வாரம் அவ்விடம் வருகிறேன். மற்ற விபரங்கள் நேரில்.

அசல்

20.5.42. புரொப்ரைட்டர்.

அசல் –1

நாங்கள் கேட்டுக்கொண்டபடி உறுதுமாஸ்
பத்திரிக்கைகளை தங்கள் திருக்கழுக்குன்றம்
விலாசத்திற்கே அனுப்பிவைக்கிறோம். வேணும்.

நமஸ்காரம்.

புரொப்ரைட்டர்.

TIRUKALIKUNDRAM
DELY.
21 MAY 42
A.M.




ம.கா.ரு.ஸ்ரீ
எஸ். கல்யாணசுந்தரம் அய்யர் அவர்கள்,
45, சன்னதித் தெரு,
திருக்கழுக்குன்றம்,
திருக்கழுக்குன்றம் போஸ்ட்,
செங்கல்பட்டு டிஸ்டிரிக்ட்.